# பூமி பிரகடனம்

## முன்னுரை

பூமியின் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் நாம் நிற்கின்றோம். மனித குலம் தன் எதிர்காலத்தை தேர்ந்தெடுக்க வேண்டிய நேரம் இது. உலகம் மேலும் அதிகமாக பரஸ்பர சார்பாகவும் நெகிழ்வாகவும் மாறி வருவதால், எதிர்காலம் அதிக ஆபத்துகளையும், வாய்ப்புக்களையும் ஒருங்கே கொண்டுள்ளது. நாம் முன்னேற வேண்டுமென்றால், பல்வகை கலாச்சாரங்களும் உயிரினங்களும் கொண்ட நாம் ஒரே பொது தலைவிதி கொண்ட ஒரே மனிதக் குடும்பமும், பூமி சமுதாயமும் என்று உணர வேண்டும். இயற்கைக்கு மரியாதை, அனைத்துலக மனித உரிமைகள், பொருளாதார நியாயம் மற்றும் சமாதானம் கொண்ட கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறான உலக சமுதாயத்தை நாம் ஒன்றாக உருவாக்க வேண்டும். இந்த நோக்கில், பூமியின் மக்களாகிய நாம் ஒருவருக்கொருவர், சமுதாயத்துக்கு, மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கு எமது பொறுப்பை அறிவிப்பது அவசியமாகும்.

## பூமி, நம் வீடு

மனித குலம் ஒரு விரிவான, வளர்ந்து வரும் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும். எங்கள் வீடு பூமி, தனித்துவமான உயிரினங்களின் சமூகத்தால் உயிர்ப்போடுள்ளது. இயற்கையின் சக்திகள் வாழ்வை சவாலானதும், நிச்சயமற்றதுமாய் ஆக்கினாலும், பூமி உயிரின் வளர்ச்சிக்கான அத்தியாவசிய சூழலை வழங்கியுள்ளது. உயிரின சமூகத்தின் திடத்தன்மை மற்றும் மனித குலத்தின் நலன், அதன் அனைத்து சுற்றுச்சூழல் அமைப்புகளும், செழுமையான தாவரங்களும் விலங்குகளும், வளமான மண்ணும், தூய்மையான நீரும், சுத்தமான காற்றும் கொண்ட ஆரோக்கியமான சூழல் தொகுதியை பாதுகாப்பதில் இருக்கிறது. உலக சுற்றுச்சூழல் மற்றும் அதன் வரையறுக்கப்பட்ட வளங்கள் குறித்த அக்கறை அனைத்து மக்களுக்கும் பொதுவானது. பூமியின் உயிர்மை, பல்வகைமை மற்றும் அழகை பாதுகாப்பது நம் புனிதமான பொறுப்பு ஆகும்.

## சர்வதேச நிலைமை

தற்போதைய முக்கிய உற்பத்தி மற்றும் கொள்முதல் முறைகள் சுற்றுச்சூழலை அழிப்பதற்கும், வளங்களை அறியக்கூடிய நிலைக்கு கொண்டு செல்லவும், மற்றும் பெரும் உயிரின அழிவுகளுக்கும் காரணமாகி வருகின்றன. சமூகங்கள் பலவீனப்படுத்தப்படுகின்றன. அபிவிருத்தியின் நன்மைகள் சமமாக பகிரப்படவில்லை, மற்றும் பணம் படைத்தோருக்கும் வறுமை நிலையில் உள்ளோருக்குமான இடைவெளி அதிகமாகி வருகிறது. நியாயமின்மை, வறுமை, அறியாமை, மற்றும் வன்முறை மிக்க முரண்பாடுகள் பரவலாகி பெரும் துன்பத்திற்கு காரணமாகின்றன. மனித எண்ணிக்கை முன்பே இல்லாத அளவிற்கு அதிகரித்து சுற்றுச்சூழல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு அதிகமான

சுமையை ஏற்படுத்தியுள்ளது. உலக பாதுகாப்பின் அடித்தளம் அச்சுறுத்தப்படுகின்றது. இவை ஆபத்தான நெருக்கடிகளாக இருந்தாலும் அவை தவிர்க்க முடியாதவை அல்ல.

## முன் நிற்கும் சவால்கள்

தேர்வு நமதே: பூமியையும் நம் ஒவ்வொருவரையும் பராமரிக்கும் உலகளாவிய கூட்டுறவை உருவாக்குவோமா, இல்லையெனில் நம்மையும் உயிரின் பல்வகைமையையும் ஆபத்துக்கு உட்படுத்துவோமா? நமது விழுமியங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் வாழ்வியல் முறைகளில் அடிப்படையான மாற்றங்கள் அவசியமாகின்றன. மனித மேம்பாடு என்பது, அடிப்படை தேவைகள் பூர்த்தியான பின்பு, அதிகமாகச் சொத்துகள் குவிப்பதல்ல, ஆனால் மனிதனாக அதிகமாக இருப்பதைத்தான் குறிக்கிறது. அனைவருக்கும் தேவையானவை வழங்கும் திறனும், சுற்றுச்சூழல் மீது உண்டாகும் தாக்கத்தை குறைக்கும் தொழில்நுட்பமும் நம்மிடம் உள்ளது. உலகளாவிய சிவில் சமூகத்தின் உருவாக்கம் ஜனநாயக மற்றும் மனிதநேயம் நிறைந்த உலகத்தை கட்டியெழுப்பகூடிய  புதிய வாய்ப்புகளை உருவாக்கிறது. எமது சுற்றுச்சூழல், பொருளாதார, அரசியல், சமூக மற்றும் ஆன்மீக சவால்கள் எல்லாமே ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன; அதனால் நாம் ஒன்றிணைந்தால் அனைவரையும் உள்ளடக்கிய தீர்வுகளை காண முடியும்.

## பொதுவான பொறுப்பு

இந்தத் திறன்களை நனவாக்க, நாமெல்லாம் உலகமெங்கும் உள்ள சமூகத்துடனும், நம்முடைய உள்ளூர் சமூகங்களுடனும் நம்மை ஒரே அமைப்பாகக் கருதி, பொதுவான பொறுப்புடன் வாழ வேண்டும் என்ற முடிவை எடுக்க வேண்டும். நாம் பல்வேறு நாடுகளின் குடிமக்களாக இருக்கிறோம் என்றும், ஒரே உலகத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கிறோம்; இந்த உலகத்தில் உள்ளூர் மற்றும் உலகளாவிய நிலைகள் ஒன்றோடொன்று நெருக்கமாக இணைந்துள்ளன. இயற்கையின் மர்மத்தை மதித்து, வாழ்க்கை எனும் பரிசுக்காக நன்றியுடன், பூமியில் மனிதன் பெற்ற இடத்தை உணர்ந்து பணிவுடன் வாழும்போது, மனித ஒற்றுமையும் அனைத்து உயிரினங்களுடனான சகோதரத்துவ உணர்வும் வலிமை பெறுகிறது.

முன்னேறிவரும் உலக சமூகத்திற்கு ஒரு நெறிசார் அடித்தளமாகச் சேவையாற்ற, அடிப்படை மதிப்பீடுகளின் ஒரு பகிர்ந்தகொள்ளப்பட்ட பார்வை இன்றியமையாததாக இருக்கிறது. ஆகையால், நம்பிக்கையுடன் நாங்கள் ஒன்றிணைந்து, நிலைபேறான வாழ்வுக்கான பரஸ்பர சார்ந்த முதன்மைக் கொள்கைகளைப் பின்வரும் பொதுவான தரமாக உறுதிப்படுத்துகிறோம் — இதன் மூலம் தனிநபர்கள், அமைப்புகள், தொழில்கள், அரசாங்கங்கள் மற்றும் நாடுகடந்த நிறுவனங்களின் நடத்தை வழிகாட்டப்படவும், மதிப்பீடு செய்யப்படவும் வேண்டும்.

# பூமி பிரகடனம்

## முதன்மைக்கொள்கைகள்

*I. உயிர் சமுதாயத்தின் மதிப்பும் பராமரிப்பும்*

**1.பூமியையும் அதன் உயிர் பல்வகைத் தன்மையையும் மதியுங்கள்.**

a) அனைத்து உயிரினங்களும் ஒன்றோடொன்று சார்ந்தவை என்பதை, அவை மனிதருக்கு பயனுள்ளதா இல்லையா என்பதை பொருட்படுத்தாமல், உயிரின் ஒவ்வொரு வடிவமும் மதிப்புடையது என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.
b) அனைத்து மனிதர்களின் உள்ளார்ந்த கண்ணியத்திலும், மனித இனத்தின் அறிவியல், கலை, நெறி மற்றும் ஆன்மீக திறன்களிலும் இருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்துங்கள்.

**2. புரிதல், கருணை, மற்றும் அன்புடன் உயிர் சமுதாயத்திற்கான பராமரியுங்கள்**

a) இயற்கை வளங்களை உடைமயப்படுத்தும், நிர்வகிக்கும் மற்றும் பயன்படுத்தும் உரிமையோடு சுற்றுச்சூழல் சேதங்களை தடுக்கும், மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் கடமைகளும் இணைந்தே வருகிறது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
b) அதிகமான சுதந்திரம், அறிவு மற்றும் அதிகாரம் கிடைத்தால், பொதுநலன் மேம்பாட்டிற்கான பொறுப்பும் அதிகரிக்குமென்று உறுதிப்படுத்துங்கள்.

3. தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்காக பூமியின் வளமும் அழகும் பாதுகாக்கப்பட வேண்டும்.

a) ஒவ்வொரு தலைமுறையின் செயல்பாட்டு சுதந்திரமும் எதிர்கால தலைமுறைகளின் தேவைகளால் வரையறுக்கப்படுவதாக அறியுங்கள்.
b) எதிர்கால தலைமுறைகளுக்கு பூமியின் மனித மற்றும் சுற்றுச்சூழல் சமூகங்களின் நீண்டகால வளர்ச்சியை ஆதரிக்கும் மதிப்புகள், பாரம்பரியங்கள் மற்றும் நிறுவனங்களை கடத்துங்கள்

**II. சுற்றுச்சூழல் ஒருமை.**

**4. நீதியான, பங்களிப்புடனான, நிலைபேறான மற்றும் சமாதானமான ஜனநாயக சமுதாயங்களை கட்டியெழுப்புங்கள்.**

a) அனைத்து நிலைகளிலும் சமூகங்கள் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைக் கடமைகளை உறுதி செய்து, ஒவ்வொருவரும் தமது முழு திறமையை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும்.

b) சமூக மற்றும் பொருளாதார நீதியை மேம்படுத்தி, அனைவரும் சுற்றுச்சூழல் பொறுப்புள்ள, பாதுகாப்பான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை அடையச் செய்யுங்கள்.

**5. பூமியின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஒருமையை, உயிரின பன்மை மற்றும் வாழ்வை நிலைக்க வைக்கும் இயற்கை செயல்முறைகளில் சிறப்பு கவனம் செலுத்தி பாதுகாத்து, மீட்டெடுக்க வேண்டும்.**

a) எல்லா நிலைகளிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மீள்கட்டுமானமும் அனைத்து வளர்ச்சி முயற்சிகளிலும் அடிப்படையாகும் விதமாக, நிலைத்த வளர்ச்சி திட்டங்களையும் விதிகளையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.
b) பூமியின் வாழ்வை நிலைக்கசெய்யும் அமைப்புகளை பாதுகாப்பதற்கும், உயிரின பன்மை மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பேணுவதற்கும், வனப்பகுதிகள் மற்றும் கடல் பகுதிகள் உட்பட இயற்கை மற்றும் உயிரிணைவாழ்வு காப்பகங்களை நிறுவி பாதுகாக்க வேண்டும்.
c) அபாயத்தில் உள்ள இனங்களின் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மீளுருவாக்கத்தை ஊக்குவியுங்கள்.
d) உள்ளூர் இனங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் உள்ளூர் அல்லாத அல்லது உயிரியல் மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்களை கட்டுப்படுத்தி ஒழிக்கவும், அத்தகைய தீங்கு விளைவிக்கும் உயிரினங்கள் அறிமுகம் ஆகாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவும்.
e) நீர், மண், காடு மற்றும் கடல் உயிரினங்கள் போன்ற புதுப்பிக்கக்கூடிய வளங்களை, அதன் புதுப்பிக்கும் விகிதத்துக்கு மேலாக பயன்படுத்தாமல், சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் முறையில் நிர்வகியுங்கள்.
f) கனிமங்கள் மற்றும் படிம எரிபொருட்கள் போன்ற புதுப்பிக்க முடியாத வளங்களை, குறைந்தபட்சமாக இழப்பை ஏற்படுத்தி, சுற்றுச்சூழலுக்கு தீங்கு இல்லாமல் நிர்வகியுங்கள்.

**6. சுற்றுச்சூழலை பாதுகாக்க சிறந்த வழி சேதத்தைத் தடுப்பதாகக் கொள்ளுங்கள், போதுமான தகவல் இல்லாதவிடத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருங்கள்.**

a) அறிவியல் அறிவு முழுமையில்லாத அல்லது தெளிவில்லாத போது கூட, பெரிய அல்லது மாற்றமுடியாத சுற்றுச்சூழல் சேதம் ஏற்படும் வாய்ப்பைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
b) பரிந்துரைக்கப்படும் செயல் குறிப்பிடத்தக்க அளவு சேதம் ஏற்படுத்தாது என்று வாதிடுபவர்களுக்கு அதை நிரூபிக்கும் பொறுப்புள்ளது, சுற்றுச்சூழல் சேதத்திற்குப் பொறுப்பானவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

c) மனித செயல்களால் உருவாகும் மொத்த, நீண்டகால, மறைமுக, தொலைதூர மற்றும் உலகளாவிய விளைவுகள் தீர்மானங்களில் கவனிக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.
d) சுற்றுச்சூழலின் எந்த பகுதிக்கும் மாசுபாடு ஏற்படாமல் தடுக்கவும், மற்றும் கதிரியக்கமுள்ள, நச்சான அல்லது பிற ஆபத்தான பொருட்கள் தேங்குவதற்கான வாய்ப்பையும் தவிர்க்குங்கள்.
e) சுற்றுச்சூழலை சேதப்படுத்தும் இராணுவ நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**7. பூமியின் புதுப்பிக்கும் திறன், மனித உரிமைகள் மற்றும் சமூக நலன்களை பாதுகாக்கும் உற்பத்தி, நுகர்வு மற்றும் இனப்பெருக்க முறைகளை பின்பற்றுங்கள்.**

a) உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளில் பயன்படுத்தப்படும் பொருட்களை குறைத்து, மீண்டும் பயன்படுத்தி, மறுசுழற்சி செய்து, மீதமுள்ள கழிவுகள் சுற்றுச்சூழல் அமைப்புகளில் சேரக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
b) சக்தியை பயன்படுத்தும் போது, வினைத்திறனுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளுங்கள்; மேலும் சூரிய சக்தி, காற்று போன்ற புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலங்களை அதிகமாகப் பயன்படுத்துங்கள்
c) சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களின் உருவாக்கம், நடைமுறைப்படுத்தல் மற்றும் சமநிலையான பரிமாற்றத்தை ஊக்குவியுங்கள்.
d) பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை விலையில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளின் முழுமையான மதிப்பை சேர்த்துக் கொள்ளுங்கள், மேலும் நுகர்வோர்கள் உயர் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தரநிலைகளை பூர்த்தி செய்யும் பொருட்களை அடையாளம் காணும் வாய்ப்பை வழங்குங்கள்.
e) இனப்பெருக்க ஆரோக்கியத்தையும் பொறுப்பான இனப்பெருக்கத்தையும் ஊக்குவிக்கும் சுகாதார சேவைகளை அனைவருக்கும் சமமாகக் கிடைக்கவிட உறுதிசெய்யுங்கள்.
f) எல்லையுள்ள உலகில் வாழ்க்கைத் தரத்தையும் பொருள் தன்னிறைவையும் முக்கியமாகக் கொள்ளும் வாழ்க்கை முறைகளை பின்பற்றுங்கள்.

**8. சூழல் நிலைத்தன்மை குறித்த ஆய்வுகளை முன்னேற்றி, பெற்ற அறிவின் திறந்த பரிமாற்றத்தையும் பரவலான பயன்பாட்டையும் ஊக்குவியுங்கள்.**

a) நிலைத்தன்மை தொடர்பான பன்னாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை ஊக்குவித்து, வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளுக்கு சிறப்பான கவனம் வழங்குங்கள்.

b) சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் மனித நலனுக்கும் பங்களிப்பு செய்யும் அனைத்து கலாசாரங்களிலும் உள்ள பாரம்பரிய அறிவையும் ஆன்மீக ஞானத்தையும் உணர்ந்து, அவற்றை பாதுகாக்க உறுதியாக செயல்படுங்கள்.
c) மனித ஆரோக்கியத்துக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் மிக முக்கியமான தகவல்கள், மரபணு குறித்த அறிவு உள்ளிட்டவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு எப்போதும் கிடைக்குமாறு உறுதிசெய்யுங்கள்.

---

**III. சமூக பொருளாதார நீதி**

**9. நெறிமுறை, சமூக மற்றும் சுற்றுச்சூழலுக்கான அத்தியாவசிய படிநிலையாய் வறுமையை ஒழித்தல்.**

a) தேசிய மற்றும் பன்னாட்டு வளங்களை ஒதுக்கி, குடிநீர், சுத்தமான காற்று, உணவு பாதுகாப்பு, மாசில்லாத மண், தங்குமிடம் மற்றும் பாதுகாப்பான சுகாதார வசதிகளுக்கான உரிமையை உறுதி செய்யுங்கள்.
b) ஒவ்வொரு மனிதனுக்கும் நிலைத்த நிலை வாழ்வாதாரத்தை நிலைநாட்ட தேவையான கல்வி மற்றும் வளங்களை வழங்கி, ஆதரவற்றோருக்கு சமூக பாதுகாப்பும் பாதுகாப்பு அமைப்புகளும் வழங்குங்கள்.
c) புறக்கணிக்கப்பட்டோரை அங்கீகரித்து, நலிவுற்றோரை பாதுகாத்து, பாதிக்கப்பட்டோருக்கு உதவி, அவர்களின் ஆற்றலை வளர்த்து தங்களின் இலட்சியங்களை அவர்கள் அடைவதற்கு உதவி செய்யுங்கள்.

**10. அனைத்து நிலைகளிலும் உள்ள பொருளாதார செயல்பாடுகளும் நிறுவனங்களும், சமத்துவமாகவும் நிலைபேறான முறையிலும் மனித வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள்.**

a) நிதிவளங்களின் சமத்துவமான விநியோகத்தை, ஒரு நாட்டிற்குள்ளும் நாடுகளுக்கிடையிலும், ஊக்குவிக்குங்கள்.
b) வளர்ந்து வரும் நாடுகளின் அறிவு, நிதி, தொழில்நுட்ப மற்றும் சமூக வளங்களை மேம்படுத்தி, அவர்கள்மீது உள்ள கடினமான பன்னாட்டு கடன்சுமையை குறைக்கவும்.
c) அனைத்து வர்த்தகங்களும் நிலைபேறான வள பயன்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முற்போக்கான தொழிலாளர் தரநிலைகளை ஆதரிக்கும் வகையில் நடைபெறுவதை உறுதி செய்யுங்கள்.
d) பன்னாட்டு கூட்டுறவு அமைப்புகளும் பன்னாட்டு நிதி நிறுவனங்களும் பொதுநலனுக்காக வெளிப்படையாக செயல்பட வேண்டும் என்றும், அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் உறுதி செய்யுங்கள்.

**11. நிலைப்பேறான அபிவிருத்திக்கான அடிப்படையாக பெண்களிடையேயும் ஆண்களிடையேயும் சமத்துவம் மற்றும் சமநிலையை உறுதிப்படுத்தி, கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார வாய்ப்புகளில் அனைவருக்கும் சமபாதுகாப்பை வழங்குங்கள்.**

a) பெண்கள் மற்றும் சிறுமிகளின் மனித உரிமைகளை உறுதி செய்து, அவர்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் இல்லாதொழிக்கவும்.
b) பொருளாதார, அரசியல், குடியுரிமை, சமூக மற்றும் கலாச்சார வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பெண்கள் முழுமையாகவும் சமநிலையுடனும் பங்குபெற ஊக்குவிக்கவும்; அவர்கள் முடிவுகளை மேற்கொள்பவர்களாகவும், தலைவர்களாகவும் மற்றும் பயனாளிகளாகவும் இருக்க வேண்டும்.
c) குடும்பங்களை வலுப்படுத்தி, அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பும் அன்புமிகு பராமரிப்பும் கிடைக்கச் செய்யுங்கள்.

**12. பாகுபாடு இல்லாமல் எல்லா மனிதர்களினதும், குறிப்பாக உள்ளூர் மக்களும் சிறுபான்மையினரினதும், மனித கௌரவம், உடல் ஆரோக்கியம் மற்றும் ஆன்மீக நலனுக்கு ஆதரவாக இயற்கை மற்றும் சமூக சுற்றுச்சூழல் உரிமையை பாதுகாக்கவும்.**

a) பகுப்பு, நிறம், பாலினம், பாலின பார்வை, மதம், மொழி, தேசியம், இனம் அல்லது சமூக தோற்றம் போன்ற அனைத்து வடிவங்களிலும் உள்ள பாகுபாட்டை அகற்றுங்கள்.
b) உள்ளூர்வாசிகளுக்கு அவர்களது ஆன்மிகம், அறிவு, நிலங்கள் மற்றும் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலைப்பேறான வாழ்வாதார நடைமுறைகளை உரிமையாகக் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.
c) எங்கள் சமூகத்தின் இளையோருக்கு மரியாதை அளித்து, அவர்கள் நிலைப்பேறான சமூகங்களை உருவாக்கும் அத்தியாவசிய பங்கை நிறைவேற்ற அவர்களை ஆதரியுங்கள்.
d) கலாச்சார மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பிடங்களை பாதுகாக்கவும் மீளுருவாக்கவும் செயற்படுங்கள்.

**IV. ஜனநாயகம், வன்முறை தவிர்ப்பு, சமாதானம்**

**13. அனைத்து நிலைகளிலும் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தி, நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக் குரலையும் வழங்கி, முடிவெடுத்தலில் உள்ளடங்கலான பங்கேற்பையும், அனைவருக்கும் நீதி கிடைப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.**

a. சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்து விஷயங்களுக்கும், மற்றும் அவர்களது வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய அல்லது தொடர்புடைய அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் தெளிவான, காலத்துக்கு உரிய தகவல்களை அனைவரும் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துங்கள்.

b. உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய குடிமக்கள் சமுதாயங்களை ஆதரித்து, முடிவெடுத்தலில் ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் அனைவரும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதை ஊக்குவிக்கவும்
c. கருத்துச் சுதந்திரம், வெளிப்பாட்டு சுதந்திரம், சமாதானமான ஒன்று கூடல், சங்கம் அமைத்தல் மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமைகளை பாதுகாப்பது.
d. சுற்றுச்சூழல் சேதம் மற்றும் அத்தகைய சேதம் ஏற்படக்கூடிய அபாயத்திற்கான காரணங்களுக்கான தீர்வுகள் மற்றும் நிவாரணங்களை உள்ளடக்கிய, நிர்வாக மற்றும் சுயாதீன நீதித்துறை வழிமுறைகளுக்கான வினைத்திறனான நடைமுறைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
e. அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் ஊழலை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.
f. உள்ளூர் சமூகங்களைத் தங்களின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் வலுப்படுத்தி, சுற்றுச்சூழல் பொறுப்புகளை அதனை மிகவும் திறமையாக நிறைவேற்றக்கூடிய அரசு மட்டங்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

**14. வாழ்நாள் கற்றலிலும் பாடசாலை கல்வியிலும் நிலைப்பேறான வாழ்கை முறைக்கு தேவையான அறிவு, நெறிமுறைகள் மற்றும் திறமைகளை உள்ளடக்க வேண்டும்.**
a. அனைவருக்கும், குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு, நிலைப்பேறான வளர்ச்சியில் செயலில் பங்கேற்க வல்ல கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டும்.
b. நிலைப்பேறான கல்வியில் கலைகளும் மனிதவியல் அறிவும் மற்றும் அறிவியலும் பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டும்.
c. **c**சூழல் மற்றும் சமூக சவால்களைப் பற்றிய விழிப்புணர்வில் ஊடகங்களின் பங்களிப்பை வலுப்படுத்த வேண்டும்.
**d.** நிலைத்த வாழ்விற்கு தேவையான நெறிமுறைகள் மற்றும் ஆன்மீகக் கல்வியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும்.

**IV. ஜனநாயகம், வன்முறை தவிர்ப்பு, சமாதானம்**
**13. அனைத்து நிலைகளிலும் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தி, நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக் குரலையும் வழங்கி, முடிவெடுத்தலில் உள்ளடங்கலான பங்கேற்பையும், அனைவருக்கும் நீதி கிடைப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.**
a. சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்து விஷயங்களுக்கும், மற்றும் அவர்களது வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய அல்லது தொடர்புடைய அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் தெளிவான, காலத்துக்கு உரிய தகவல்களை அனைவருக்கும் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துங்கள்.
b. உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய குடிமக்கள் சமுதாயங்களை ஆதரித்து, முடிவெடுத்தலில் ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் அனைவரும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதை ஊக்குவிக்கவும்
c. கருத்துச் சுதந்திரம், வெளிப்பாட்டு சுதந்திரம், சமாதானமான ஒன்று கூடல், சங்கம் அமைத்தல் மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமைகளை பாதுகாப்பது.
d. சுற்றுச்சூழல் சேதம் மற்றும் அத்தகைய சேதம் ஏற்படக்கூடிய

அபாயத்திற்கான காரணங்களுக்கான தீர்வுகள் மற்றும் நிவாரணங்களை உள்ளடக்கிய, நிர்வாக மற்றும் சுயாதீன நீதித்துறை வழிமுறைகளுக்கான வினைத்திறனான நடைமுறைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

e. அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் ஊழலை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

f. உள்ளூர் சமூகங்களைத் தங்களின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் வலுப்படுத்தி, சுற்றுச்சூழல் பொறுப்புகளை அதனை மிகவும் திறமையாக நிறைவேற்றக்கூடிய அரசு மட்டங்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

**14. வாழ்நாள் கற்றலிலும் பாடசாலை கல்வியிலும் நிலைப்பேறான வாழ்கை முறைக்கு தேவையான அறிவு, நெறிமுறைகள் மற்றும் திறமைகளை உள்ளடக்க வேண்டும்.**

a. அனைவருக்கும், குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு, நிலைப்பேறான வளர்ச்சியில் செயலில் பங்கேற்க வல்ல கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

b. நிலைப்பேறான கல்வியில் கலைகளும் மனிதவியல் அறிவும் மற்றும் அறிவியலும் பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டும்.

c. சூழல் மற்றும் சமூக சவால்கள் குறித்து மக்கள் ஊடகங்களின் விழிப்புணர்வு உயர்த்தும் பங்கினை வலுப்படுத்த வேண்டும்.

d. நிலைப்பேறான வாழ்விற்கான நெறிமுறைகள் மற்றும் ஆன்மீகக் கல்வியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும்.

**15. அனைத்து உயிரினங்களையும் மரியாதையுடனும் கருணையுடனும் அணுக வேண்டும்.**

a. மனித சமூகங்களில் விலங்குகள் எதிர்கொள்ளும் வதையைத் தடுப்பதுடன், அவற்றை பாதுகாக்க வேண்டும்.

b. வனவிலங்குகளை வேட்டையாடுதல், பிடித்தல், மற்றும் மீன் பிடித்தல் போன்ற செயல்கள் மூலம் ஏற்படும் கடுமையான, நீடித்த அல்லது தவிர்க்கக்கூடிய வலியிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

c. குறிக்கோளாக இல்லாத இனங்களை பிடித்தல் அல்லது அழிக்கும் செயல்களை முழுமையாக தவிர்க்கவும், நீக்கவும் வேண்டும்.

**16. வன்முறை தவிர்ப்பு மற்றும் சமாதான பண்பாட்டை வளர்த்தெடுத்தல்**

a) அனைத்து மக்களிடையிலும் மற்றும் நாடுகளுக்கிடையிலும் பரஸ்பர புரிதல், ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்து ஆதரிக்கவும்.
b) வன்முறை மோதல்களை தடுக்கும் முழுமையான திட்டங்களை செயல்படுத்தி, சுற்றுச்சூழல் மோதல்களை மற்றும் பிற வழக்குகளை பரஸ்பரம் ஒத்துழைக்கும் முறையில் பரிமாறி நிர்வகிக்கவும்.
c) நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைப்புகளை அச்சுறுத்தாத பாதுகாப்பு நிலைக்கு கொண்டு வந்து, இராணுவ வளங்களை சூழல் மீளமைப்பு உள்ளடங்கலான அமைதி நோக்கங்களுக்காக பயன்படுத்துதல்
d) அணு, உயிரியல், விஷமான ஆயுதங்கள் மற்றும் பிற பெரும் அழிவு விளைவிக்கும் ஆயுதங்களை நீக்கவும்.

e) விண்கலம் மற்றும் வெளி விண்வெளி பயன்பாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் உதவுமாறு உறுதி செய்யவும்.
f) அமைதி என்பது தன்னுடனும், பிற நபர்களுடனும், பிற கலாச்சாரங்களுடனும் உருவாக்கப்படும் சரியான உறவுகளாலான ஒரு முழுமையான நிலை ஆகும் என்பதை ஏற்றுக்கொள்ளல்

**எதிர்காலத்துக்கான பாதை**

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, அனைவரின் பொதுவான தலைவிதியானது  புதிய ஆரம்பத்தை நோக்கி தள்ளியிருக்கிறது. இத்தகைய மீளுருவாக்கத்தையே  பூமி பிரகடனத்தின் கொள்கைகள் பிரதிபலிக்கின்றன. இந்த வாக்குறுதியை நிறைவேற்ற, நாம் பூமி பிரகடனத்தின் மதிப்பீடுகள் மற்றும் குறிக்கோள்களை ஏற்று, அதனை பரப்புவதிலும் செயல்படுத்துவதிலும் முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

இதற்கு உளமார்ந்த மனமாற்றம் தேவைப்படுகிறது. புதிய சர்வதேச சார்பு மற்றும் பொது பொறுப்புணர்வு தேவைபடுகிறது. நாம் நிலைபேறான வாழ்வுமுறைக்கான பார்வையை உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய அளவில் உருவாக்கி, செயல்படுத்த வேண்டும். எமது கலாசாரப் பல்வகைமை என்பது ஒரு மதிப்புமிக்க பாரம்பரியம். வேறு வேறு கலாசாரங்கள் இந்தக் நோக்கத்தை அடைய தனித்துவமான வழிகளை கண்டடைவார்கள். பூமி பிரகடனம் உருவான போது ஏற்பட்ட உலகளாவிய உரையாடலை நாம் மேலும் ஆழமாகவும் விரிவாகவும் செய்து கொண்டே போக வேண்டும். ஏனெனில் உண்மையையும் அறிவையும் தேடும் இந்தக் கூட்டு முயற்சியிலிருந்து நாம் இன்னும் பலவற்றை கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

விழுமியங்களுக்கிடையே முரண்கள் எழுவது இயல்பானது. இது தேர்வுகளை மேற்கொள்வது கடினமானது என்பதையும் குறிக்கும். இருந்தாலும், பல்வகைமையை ஒற்றுமையுடன் ஒத்திசைக்கவும், தனிநபர் சுதந்திரத்தைப் பொது நலனுடன் சமநிலைப்படுத்தவும், குறுகிய காலக் குறிக்கோள்களை நீண்டகால இலக்குகளுடன் இணைக்கவும் வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இதில் ஒவ்வொரு நபரும், குடும்பமும், நிறுவங்களும், சமூகங்களும் முக்கியமான பங்காற்றுகின்றார்கள். கலைகள், அறிவியல், மதங்கள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள், வணிக நிறுவனங்கள், அரசல்லாத அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் — இவை அனைத்தும் ஆக்கபூர்வமான தலைமைத் திறனை வழங்க அழைக்கப்படுகின்றன.அரசு, குடிமக்கள் சமூக அமைப்புகள் மற்றும் வணிகத் துறையின் கூட்டாண்மை என்பன திறம்பட நடைபெறும் நிர்வாகத்துக்குத் தேவைப்படும் அடிப்படைத் தூண்களாகும்.

நிலைபேறான உலக சமூகத்தை உருவாக்க, உலகநாடுகள் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான தங்களது உறுதிமொழியை புதுப்பிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ் உள்ள கடமைகளை பூர்த்தி செய்யவும், பூமி பிரகடனத்தின் கொள்கைகளைச் சார்ந்த ஒரு சர்வதேச சட்டபூர்வமான

கருவி மூலம் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி தொடர்பான நடைமுறைகளை ஆதரிக்கவும் வேண்டும்.

நமது காலம், வாழ்க்கையை மீளொரு புதிய மரியாதையுடன் அணுகும் விழிப்புணர்வுக்காக, நிலைபேறை சாதிக்க கொண்ட உறுதியான தீர்மானத்துக்காக, நீதி மற்றும் அமைதி நோக்கிய போராட்டத்தின் தீவிர வேகத்துக்காக, மற்றும் வாழ்வை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய உணர்வுக்காக நினைவுகூரப்படட்டும்.

**பூமி பிரகடனத்தின் தோற்றம்**

1992ஆம் ஆண்டு நடைபெற்ற பூமி உச்சி மாநாட்டிற்கு அடுத்த நடவடிக்கையாக, நிலைத்த எதிர்காலத்துக்கான மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளை உள்ளடக்கிய உலகளாவிய ஒப்புமைக் கருத்து ஒன்றை உருவாக்கும் நோக்கில், சுயாதீனமான பூமி பிரகடன ஆணையம் (Earth Charter Commission) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆவணம், கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக நடைபெற்ற விரிவான சர்வதேச ஆலோசனைகளின் மூலம் உருவாக்கப்பட்டது. உலகம் முழுவதிலும் இருந்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்களித்தனர். இந்த பிரகடனத்தை, யுனெஸ்கோ (UNESCO) மற்றும் உலக சூழலியல் சங்கமான IUCN உட்பட, ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் அதிகாரப்பூர்வமாக ஆதரித்துள்ளன. மேலும் தகவலுக்கு, தயவுசெய்து www.EarthCharter.org இணையதளத்தை பார்வையிடுங்கள்.